விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 074 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 19 சனிக்கிழமை (02.03.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

சாந்தனுக்கு நீதி கோரி

## யாழ்.இந்தியத் துணைத் தூதரகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

சென்னையில் உடல்நலக்குறை வால் உயிரிழந்த சாந்தனுக்கு நீதி கோரி யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத்தூதரகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட வுள்ளது.

குறித்த போராட்டமானது, யாழ் மருதடி வீதியிலுள்ள இந்திய துணை தூதரகம் முன்பு நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு நடை பெறவுள்ளது.

"இந்திய -திராவிட கூட்டுச் சதியால் பலியெடுக்கப்பட்ட சாந்தனிற்கு நீதி கோரி யாழிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தை முற்றுகைக்கிட்டு "இந்தியத் துரோகத்தை வேரறுக்க தமிழர்களாய் ஒன்றிணைவோம்" எனும் தொனியில் குறித்த போராட்டம் இடம் பெறவுள்ளது.

11

## சாந்தனின் பூதவுடல் இன்று யாழ்.வருகின்றது


வடமராட்சியில் இறுதிக்கிரியைகளுக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

சென்னையில் உயிரிழந்த சாந்தனின் பூதவுடல் இன்று யாழ்ப்பாணம் கொண்டு வரப்படவுள்ளது.

வடமராட்சி உடுப்பிட்டியில் அமைந்துள்ள அவரது தாயாரின் இல்லத்தில் இறுதிக்கிரியைக் கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கிலிருந்து விடுதலை 02



நாடு முன்னோக்கிச் செல்ல

# நவீனமயமாக்கல் மிகவும் அவசியம்



ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(திருகோணமலை)

இலங்கை முன்னோக்கிச் செல் வதற்கு நாட்டில் ஒரு பெரிய நவீன மயமாக்கல் இருக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## வீதியைக் கடக்க முற்பட்டவர் மோ.சைக்கிள் மோதிப் பலி

உரும்பிராயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

குப்பையைக் கொட்டி விட்டு வீதியைக் கடக்க முற் பட்டவர் மோட்டார் சைக்கிள் மோதியதில் உயிரிழந்துள் ளார்.

இச்சம்பவம் பலாலி வீதி உரும்பிராயில் இடம்பெற் றுள்ளது.

இதில் உரும்பிராய் வடக்கு பகுதியைச் சேர்ந்த சின்னத்தம்பி 11

## பேருந்து மோதியதில் மாணவன் உயிரிழப்பு



மீசாலையில் சம்பவம்

(சாவகச்சேரி)

இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து மோதியதில் பாடசாலை மாணவன் ஒருவன் உயிரிழந் துள்ளார்.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக் 11

பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து

## திருமலையைச் சேர்ந்த 13 வயது மாணவன் சாதனை

(மன்னார்)

இந்தியாவிலிருந்து தலைமன்னார் வரை பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து 13 வயது மாணவன் ஒருவன் சாதனை நிகழ்த்தியுள் 11



தனியார் போக்குவரத்து சேவையினர்

## மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தக்கூடாது - அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

மக்களை அசௌகரியங் களுக்குள்ளாக்கும் வகை யிலான தனியார் போக்கு வரத்து சேவையினரின் செயற் பாடுகள் விரும்பத்தகாத செயல் என சுட்டிக்காட்டிய அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா,

தனியார் போக்குவரத்து சேவையினரின் இவ்வாறான செயற்பாடுகள் இனியொரு போதும் ஏற்படாதிருக்கும் வகையில் இருப்பது அவசி யம் எனவும் வலி யுறுத்தியுள்ளார். 02

தரமற்ற மருந்து இறக்குமதி

## சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் கைது



(கொழும்பு)

சுகாதார அமைச்சின் மேல திக செயலாளர் சமன் ரத்நாயக்க நேற்று குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தரமற்ற மருந்து 11

## அதிகரிக்கும் வெப்பம்

மக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

தொடர்ந்து அதிகரிக்கும் வெப்பம் தொடர்பாக அவதான மாக இருக்குமாறு வளிமண்ட லவியல் திணைக் களம் பொதுமக்க 11

வலிகாமம் பாதுகாப்பு வலயத்தில்

## ஆலயங்களைத் தரிசிக்க பொதுமக்களுக்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள ஆலயங்களைத் தரிசிப்பதற்கு நேற்று பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

கடந்த மாதம் 23ஆம் திகதி குறித்த உயர் பாதுகாப்பு வல யத்திலுள்ள ஆலயங்களை தரிசித்து பூஜை வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு இராணுவ பாது காப்பு தலைமையகத்தினால் அனுமதி வழங்கப் பட்டிருந்தது. 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சப்புகஸ்கந்த மூடப்பட்டது

(கொழும்பு)

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் நாளாந்த செயற்பாடுகள் 45 நாட்கள் தற்காலிகமாக மூடப்படவுள்ளதாக கனியவள கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

அதாவது எதிர்வரும் ஜீலை மாதம் முதல் அதன் செயற்பாட்டு நடவடிக்கைகள் தற்காலிகமாக மூடப்படவுள்ளதாக அந்த கூட்டுத்தாபனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச முறைமைகளுக்கு அமைய, 45 நாட்களுக்கு சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் கட்டாயத் தேவைகளுக்காக மூடப்பட வேண்டும்.

இதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் தடையின்றி எரிபொருளை விநியோகிப்பதற்கான சகல திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளதாக குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## மக்களுக்கு...

வடமாகாணம் தழுவிய ரீதியில் தனியார் போக்குவரத்து சேவையினரால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் தொடர்பில் தீர்வு காண்பதற்கான கூட்டம் ஆளுநர் அலுவலகத்தில் (29.02.2024) இடம்பெற்ற வேளையே அமைச்சர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் கூறுகையில்,

தனியார் போக்குவரத்து சேவையயை முன்னெடுப்போர் தமது கோரிக்கையை வெளிப்படுத்தும் வகையிலான போராட்டங்களை ஜனநாயக ரீதியில் முன்னெடுப்பதில் தவறுகள் ஏதும் இருக்கப் போவதில்லை. அது அவர்களது அடிப்படை உரிமையும் கூட. ஆனால் மக்களை அசௌகரியங்களுக்குள்ளாக்கும் வகையில் அரச போக்குவரத்து சேவையை முடக்கி மக்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்திய அவர்களது செயலை எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இது முற்றிலும் வெறுக்கத்தக்க செயல். இதேவேளை இவ்வாறான மக்களை அசௌகரியங்களுக்குள்ளாக்கும் செயற்பாடுகள் இனியொருபோதும் ஏற்படாதிருக்கும் வகையில் தமது கோரிக்கைகளை வெளிப்படுத்துவது அவசியம் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை குறித்த பிரச்சினைக்கான தீர்வைக்காண ஆளுநர் தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டு ஒருவார காலப்பகுதியில் இருதரப்பு நியாயங்களும் ஆராயப்பட்டு அதன் அடிப்படையில் இறுதி முடிவை ஆளுநர் அறிவிப்பார் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ஆலயங்களை...

அதன் இரண்டாவது நாளாக நேற்று கட்டுவன் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் மற்றும் மானம்பிராய் பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றிற்கு சென்று பூஜை வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு இராணுவத்தினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இப்பகுதியிலிருந்து 1990 ஆம் ஆண்டு தீபாவளி நாளில் இராணுவ நடவடிக்கை காரணமாக தாம் இடம்பெயர்ந்து சென்று தற்போது 34 வருடங்களின் பின்னர் இவ்வாலயத்தை வந்தடைந்து தற்போது தரிசிக்கும் வாய்ப்பினை இராணுவத்தினர் ஏற்படுத்தியிருப்பது மகிழ்ச்சியளிப்பதாக ஆலயத்தின் பூசகர் தெரிவித்தார்.

குறித்த ஆலயங்களுக்கு சென்று வருவதற்கு இராணுவத்தின் பேருந்து ஏற்பாடு செய்யப்பட்டு பொதுமக்கள் பாதுகாப்பான முறையில் கோயிலுக்கு சென்று பூஜை வழிபாடுகளில் மாத்திரம் ஈடுபட்டு திரும்புவதற்காக அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில் நேற்று 30க்கும் மேற்பட்ட மக்கள் அங்கு சென்றிருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த பொதுமக்கள், தமது ஆலயங்கள், ஆலய சூழலை அண்டிய தமது காணிகள் என்பவற்றை வெகு விரைவில் விடுவித்து தாம் குடியமர்வதற்கு ஏற்றவாறு அவற்றை வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். (ம-7)

## நவீனமய...

விமானப்படை கெடட்களின் (Cadet) சிதறல் அணிவகுப்பில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் நாம் முன்னேற வேண்டுமானால், நாட்டில் ஒரு பெரிய நவீனமயமாக்கல் இருக்க வேண்டும், நமது பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மையை நாம் பாதுகாக்க வேண்டும், அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு ஆபத்து ஏற்பட்டால், அது நம் நாட்டிற்கு ஆபத்து, நாம் அனைவரும் உலகில் தனித்தனியாக வாழமுடியாது.

அத்துடன் "இலங்கை போன்ற நாடு போர் செய்து அனுபவம் பெற்ற நாடு ஒதுங்கி நிற்கக் கூடாது. அப்படிச் செய்தால் நம் கடமையை நிறைவேற்ற தவறிவிட்டோம் என்றே அர்த்தம். மேலும் இன்று செங்கடலில் நமது பொருளாதார உரிமைகள் பாதிக்கப்படுமானால், அவற்றைப் பாதுகாக்க நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். எதிர்காலத்திலும் நாம் தயாராக இருக்க வேண்டும்" இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ம-7)

## சாந்தனின்...

செய்யப்பட்டு உயிரிழந்த சாந்தனின் உடல், நேற்று அவரது தாய் நாடான இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக அவரது உடலம் நேற்று முற்பகல் 11.35 மணிக்கு ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான யூ.எல் 122 என்ற விமானம் ஊடாக நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

அவரது உடலை உறவினர்கள் உள்ளிட்ட நெருக்கமானோர் சென்று பொறுப்பேற்றுக் கொண்டனர்.

விமான நிலையத்தின் விதிமுறைகள் பூர்த்தியான பின்னர், நீர்க்கொழும்பு வைத்தியசாலைக்கு அவரது உடல் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

சாந்தனின் பூதவுடலானது, இன்றைய தினமே யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரப்படும் என குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கோமகன் தெரிவித்துள்ளார்.

பிரேத பரிசோதனை மற்றும் பயணத் தடை போன்றவையே இந்தத் தாமதத்திற்கு காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை, குறித்த பிரேத பரிசோதனை, நீதிபதிகளின் முன்னிலையில் நடத்தப்பட வேண்டும் என்பதாலும் தாமதம் ஏற்பட்டுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது

சாந்தனின் பூதவுடலுக்கு ஞாயிற்றுக் கிழமை இறுதிக் கிரியை இடம்பெறுவது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை என அவரது சகோதரர் மதிசுதன் தெரிவித்துள்ளார்.

அவரது பூதவுடலுக்கு மீள் உடற் கூற்றுப் பரிசோதனை செய்யப் பணிக்கப்பட்டுள்ளதால் இறுதிக் கிரியை இடம்பெறும் திகதியை உறுதிப்படுத்த முடியாதுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 31 . 12 . 1942

மறைவு 01 . 02 . 2024

கடந்த 01.02.2024 அன்று இறைபதமடைந்த எமது குடும்ப விளக்கு

அமரர்

**வள்ளிநாயகி கந்தசாமித்துரை**

(கிண்ணியம்மா)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (02.03.2024) சனிக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் வல்வெட்டித்துறை ஊறணி தீர்த்தக்கரையில் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் மு.ப 10.00 மணியளவில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அருமை (மகன்) - 077 841 4450
ஈசன் (மகன்) - 071 321 6996

(19322)

இங்ஙனம்:
குடும்பத்தினர்

## காணி விற்பனைக்கு

புத்தூர் மட்டுவில் பிரதான வீதியோரம்
2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
20 அடி பாதையுடன் காணிதுண்டுகள்
விற்பனைக்கு உண்டு.

**2 பரப்பு - 5 இலட்சம்**

இன்னும் 20 துண்டுகள் மாத்திரம் உண்டு.

பார்வையிடும் நேரம் :
காலை 8.30 தொடக்கம் 6.00 வரை

மேலதிக விபரங்களுக்கு

(19330)

**074 260 0617, 076 109 8504**



## ஆட்டோ உடனடி விற்பனை

Company பராமரிப்பில் இருக்கும்
AAT Number (கறுப்பு) ஆட்டோ
உடனடி விற்பனைக்கு.

**074 242 6642**

செல்வன்
(மதியம் 12 மணிக்கு பின் தொடர்பு கொள்ளவும்.)

(19327)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்தனின் இறப்பு;

## காந்தி தேசத்தின் அவலக் குறியீடு

### யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

**நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட பின்னரும் இயற்கை நீதிக்கு விரோதமாக சிறப்பு சித்திரவதை முகாம்களில் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ள எஞ்சியுள்ளவர்களையும் விடுதலை செய்து ஈழத்தமிழர்களை சிதைத்தெடுக்கும் சித்திரவதை முகாமிற்கு இனியாவது முடிவுரை எழுத இந்திய ஒன்றிய, மாநில அரசுகளை வேண்டுகின்றோம் என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.**



இந்திய ஒன்றியத்தின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலைவழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு முழுமை பெறாத நீதி விசாரணையால் மரணதண்டனை விதிக்கப்பட்ட ஏழு தமிழர்களில் ஒருவராக 33 ஆண்டுகள் சிறைவாழ்வை அனுபவித்து தாயகம் காண காத்திருந்த தில்லையம்பலம் சுதேந்திரராஜா எனும் இயற்பெயருடைய சாந்தன் விரைவில் நாடு திரும்புவார் எனும் தமிழர்களின் எதிர்பார்ப்பும், தாயையும் தாய் மண்ணையும் காண வேண்டும் என்னும் இறுதி ஆசையும் நிறைவேறாமலேயே அவர் உயிர்பிரிந்த செய்தி தமிழர் இதயங்களைக் கனக்க வைத்துள்ளது.

பெற்ற மகனை ஒரு முறையாவது உயிருடன் பார்த்து விட வேண்டுமென்ற தாய்க்கும் - மகனுக்கும் இடையிலான 33 ஆண்டுகள் பாசப் போராட்டத்தில் சாந்தனின் இழப்பு அனைவரையும் வெடித்தழ வைக்கின்றது. மரணம் நிகழ்ந்த 28 ஆம் திகதி காலையில் கூட மகன் வருவான் என்று கோவில் தீர்த்தத்துடன் காத்திருந்த தாய்க்கு வாழ்நாள் ஏக்கம் கனவாய்ப் போனது பெருந்துயர்.

பாரத தேசத்தின் பிராந்திய நலன்களிற்கு எதிராகச் செயற்பட்டு தொடர்ந்தும் அவமதித்து வரும் இலங்கை அரசுடன் நட்புப் பாராட்டும் காந்தி தேசம் தங்களின் அற்ப பூகோள நலன்களிற்காக தங்களை நோக்கி என்றுமே நேசக்கரம் நீட்டும் ஈழத்தமிழ் மக்களை வஞ்சிப்பதென்பது அந்த நாடு இதுவரைகாலமும் தான் கொண்ட வரலாற்றிற்கும் பெருமைகளிற்கும் இழுக்கானதாகும். அன்று முதல் இன்று வரை காந்தியின் பெயர்கொண்டு புரியும் கொடூரங்களால் தனக்கு மேல் போர்த்திய போர்வை களைந்து நிர்வாணமாய் நிற்கின்றது காந்தி தேசம்.

29.02.2024 அன்று நடந்த நீதிமன்ற வாதங்களில் தமிழக அரசு வழக்கறிஞரின் கூற்றுப்படி தமிழக அரசே சாந்தனை விடுவிப்பதில் காலந்தாழ்த்தியது. எனும் துயரச்செய்தி எமக்காய் தமிழக உறவுகளும் தமிழக அரசும் நிற்பார்கள் என்று நம்பும் ஈழத்தமிழ் மக்களிற்கு துரோகச் செய்தியாய்ப் போனது இன்னுமொரு பெருந் துயரம்.

சாந்தனைத் தாயகம் அழைத்து வருவதற்கு இறுதி ஒரு மாத காலத்திற்குள் காணப்பட்ட ஏதுநிலையை குறிப்பிட்ட சில காலங்களிற்கு முன்னதாக வேனும் உருவாக்கிட நடவடிக்கை ஏதும் எடுத்திருந்தாற் கூட பெற்ற தாயைக் காண வேண்டும் எனும் இறுதி ஆசையையேனும் நிறைவேற்றிக் கொடுத்திருந்திருக்கலாம்.

ஆனால் ஏழு தமிழர்கள் இந்திய ஒன்றிய உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட ஓராண்டு காலப்பகுதிக்குள் ஈழத்தமிழ் அரசியல் தலைமைகள் கூட்டாக ஒரு தீர்க்ககரமான தீர்மானங்கள் எதனையும் மேற்கொள்ளாது, அசமந்தமாகவும் அலட்சியப் போக்குடனும் செயற்பட்டமை என்பது மன்னிக்க இயலாத கண்டனத்திற்குரியதொன்று.

நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ராஜீவ்காந்தி கொலையில் குற்றஞ்சாட்டப்பட்ட ஏனைய மூன்று ஈழத்தமிழர்களையும் அவர்கள் விரும்பும் இடங்களில் வசிப்பதற்கு அனுமதிக்க வேண்டுவதோடு, தாயகம் திரும்ப எவரேனும் விரும்பினால் அவர்களை அழைத்து வர இனியாவது உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஈழத்தமிழ் அரசியல் தரப்புக்களையும் இலங்கை, இந்திய அரசுகளையும் வலியுறுத்துகின்றோம்.

நீதியைக் காத்து நிலைநாட்டுவதில் பக்கம் சாராமல் ,இந்திய உச்ச நீதிமன்றம் மரண தண்டனை விதிக்கப்பட்ட காலம் முதல் அவர்களின் விடுதலைக்கான காலம் வரையில் காலத்திற்குக் காலம் எத்தனையோ வாய்ப்புக்களை வழங்கியும் இந்திய ஒன்றிய அரசும் தமிழக அரசும் தொடர்ச்சியான சட்ட செயற்பாடுகளின் மூலம் தாமதப்படுத்தியமை என்பது ஈழத்தமிழ் மக்களின் மீதான கசப்புணர்வையே வெளிப்படுத்தியிருப்பதாகவே எண்ணத் தோன்றுகின்றது.

இனிமேலாவது ஈழத்தமிழ் மக்களின் உரிமைகளிற்கு விரோதமான செயல்களிற்கு முற்றுப்புள்ளி வைத்து ஈழத்தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுக்க உளச்சுத்தியுடன் இந்திய அதிகாரம் செயற்பட வேண்டுகின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-33)

## செய்தித்துளிகள்

### நாடு திரும்பும் பசில்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ அடுத்த வாரம் நாடு திரும்ப உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாயரச்சி இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

பேருவளை பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பசில் ராஜபக்ஷ எதிர்வரும் 5 ஆம் திகதி நாடு திரும்ப உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த டிசெம்பர் மாதம் பசில் ராஜபக்ஷ அமெரிக்காவிற்கு சென்றிருந்தார்.

இந்த நிலையில், கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பிலும் தேர்தல்கள் தொடர்பிலும் பசில் ராஜபக்ஷ தீர்மானங்களை எடுக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (நி-5)

### எரிபொருள் விலையில் மாற்றம் இல்லை

(கொழும்பு)

தற்போதுள்ள எரிபொருள் விலையை மார்ச் மாதம் வரை தொடர்ந்து பராமரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மாதாந்த எரிபொருள் விலை திருத்தத்தின் படி, நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் குறித்த விலைகள் திருத்தப்பட்டிருக்க வேண்டும்.

இதன்படி, இம்மாதத்தில் எவ்வித விலைத் திருத்தமும் இன்றி தற்போது உள்ள விலைக்கே எரிபொருள் விற்பனையை மேற்கொள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது. (நி-5-6)

### கெஹெலியவை சந்திக்க சிறைக்குச் சென்ற மகிந்த

(கொழும்பு)

தரமற்ற மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவை முன்னாள் ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ஷ சந்தித்துள்ளார். குறித்த சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது. (நி-5)

### ஏப்ரல் முதல் சம்பள உயர்வு

(கொழும்பு)

அரச ஊழியர்களின் சம்பளத்தை 10,000 ரூபாவினால் உயர்த்தும் நடவடிக்கை எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வில்கமுவ பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தீர்வு முன்னேற்றம் குறித்து ஆராயும் கலந்துரையாடலில் கலந்து கொண்ட போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். (நி-5)

### எரிவாயு விலையில் மாற்றமில்லை-லிட்ரோ

(கொழும்பு)

லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலைகளில் இம்மாதம் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்பட மாட்டாது என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி 1ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

### பேரீச்சம்பழங்களுக்கான விசேட வரி குறைப்பு

(கொழும்பு)

ரமழான் பண்டிகையை முன்னிட்டு இறக்குமதி செய்யப்படும் பேரீச்சம்பழங்களுக்கான விசேட வர்த்தக வரி எதிர்வரும் சில தினங்களில் குறைக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்ப லாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இந்த நிவாரணத்தை பெற்றுக் கொள்வதற்கு சமய அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

### இரண்டு வாரங்களில் முட்டை விலை குறையும்

(கொழும்பு)

சந்தையில் அதிகரித்துள்ள உள்ளூர் முட்டை விலை இன்னும் இரண்டு வாரங்களில் குறையும் என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் ஆர்.எம்.சரத் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மார்ச் முதல் இரண்டு வாரங்களின் பின்னர் நுகர்வோர் 50 ரூபாவிற்கும் குறைவான விலையில் முட்டையை கொள்வனவு செய்ய முடியும் என அவர் தெரிவித்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

# விக்ரம்–ராஜன்–கங்கு வெற்றிக் கிண்ணம்–2024 யாழ்.ஜொனியன்ஸ் அணி பிளே ஓப் சுற்றுக்கு தகுதி



விக்ரம்- ராஜன்-கங்கு ஐந்தாவது தகுதி காண் போட்டி 25.02.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் யாழ்.ஜொனியன்ஸ் அணி, யூனியன்ஸ் அணியை 4 இலக்குகளால் வெற்றி பெற்றுள்ளது. இவ் வணியும் Playoff சுற்றுக்கு தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன்ஸ் அணி 30 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 214 ஓட்டங்களைப் பெற்றுள்ளன. சுஜந்தன்-53, தனுஜன்-43, மகீதன்-38 ஓட்டங்களைப் பெற் றுள்ளனர்.

பந்துவீச்சில் யாழ்.ஜொனியன்ஸ் அணி சார்பாக சண்சயன் 51 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளையும் அபிசேக் 33 ஓட்டங்களைக் கொடுத்து 3 இல க்குகளையும் கைப்பற்றினர். 215 ஓட்டங்களை வெற்றி இலக் காகக் கொண்டு களமிறங்கிய யாழ். ஜொனிய ன்ஸ் அணி 24.5 ஓவர்களில் 6 இல க்குகளையும் இழ ந்து 219 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர்.


பந்துவீச்சில் ஜான்சன்-29 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் மகீதன்-56 ஓட் டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் கைப் பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ். ஜொனி யன்ஸ் அணி பிரிவு I இல் இரு அணிகளை வெற்றி பெற்றதன் மூலம் பிளே ஓப் சுற்றுக்குத் தகுதி பெற்று இன்றுசனிக்கிழமை காலை நடைபெற விருக்கும் QUALI FIER I போட்டியில் கிறஸ்கொப்பர்ஸ் அணியை எதிர் கொள்வர் என்பது குறிப்பிடத்தக்கது. இப் போட்டியின் சிறந்த வீரனாக சன் சயன் தெரிவு செய் யப்பட்டார். (நி-5)



சன்சயன் (சிறந்த வீரர்)

# மரண அறிவித்தல்



## பொன்னுத்துரை பாலசுப்பிரமணியம்

**தோற்றம் : 15.06.1948**

**மறைவு : 01.03.2024**

சட்டநாதர் சிவன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் புதிய செம்மணி வீதி வேளாதோப்பை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பாலசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (01.03.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னுத்துரை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் அமிர்தம் அவர்களின் அன்புக் கணவரும் செல்வபாலன் (கனடா), பிலோமினா (பிரான்ஸ்), தங்கமலர் (பிரான்ஸ்), மயூரா ஆகியோரின் அன்புத் தந்தையும் தியாகராஜா, பாலசரஸ்வதி, சிலோசனா, வசந்தராணி, இந்திராணி, காலஞ்சென்ற செல்வநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜனனி, பாலகுமார், கஜன், நிர்மலன் ஆகியோரின் மாமனாரும் அபிஷன், சானுஜா, திலக்ஷன், சலோமியா, சைலானா, ஷாமலன், கனிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் அலீசியாவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.03.2024) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மதியம் 1.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புதிய செம்மணி வீதி,
வேளாதோப்பு.

(19331)

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகளாவிய ரீதியில் அதிகரிக்கும் உடற்பருமன்- ஆய்வில் தகவல்

(யாழ்ப்பாணம்)

**உலகளாவிய ரீதியில் உடற்பருமன் அதிகரித்து வாழும் நபர்களின் எண்ணிக்கை 100 கோடியை தாண்டியுள்ளதாக ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.**




மேலும் ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக உடல் பருமன் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த ஆய்வறிக்கையின் படி குழந்தைகள், இளம் பருவத்தினர் மற்றும் பெரியவர்கள் என அனைவருக்குமே இந்த பிரச்சினை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரியவர்களில் உடற்பருமன் விகிதம் பெண்களில் இருமடங்காகவும், ஆண்களில் கிட்டத்தட்ட மூன்று மடங்காகவும் உள்ளது.

கடந்த 1990 முதல் 2022 வரையிலான காலகட்டத்தில் ஆண் குழந்தைகள் மற்றும் பெண் குழந்தைகளின் உடற்பருமன் விகிதம் நான்கு மடங்கு அதிகமாக உள்ளது. கிட்டத்தட்ட எல்லா நாடுகளிலும் அதிகரித்து காணப்படுகிறது. என ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

எடை குறைந்த பெண் குழந்தைகளின் விகிதம் 1990இல் 10.3 சதவீதத்தில் இருந்து 2022இல் 8.2 சதவீதமாகவும் ஆண் குழந்தைகளில் 16.7 சதவீதத்தில் இருந்து 10.8 சதவீதமாக குறைந்துள்ளதாகவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி-5)



யாழ். மாவட்டச் செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினால் பாடசாலை மாணவர்களுக்கிடையேயான முயற்சியாண்மை ஊக்குவிப்பு செயற்திட்டத்தில் பங்குபற்றிய மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மாவட்ட செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் உதவிப்பணிப்பாளர் தி.தனஞ்சயனின் தலைமையில் நேற்றுமுன் தினம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

(படம்-சிவசாந்தன்)



வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று றோ.க.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி புதன்கிழமை இடம்பெற்றது. குறித்த போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு நினைவுப் பரிசில்கள்,வெற்றிக் கேடயங்கள் வழங்கி வைக்கப்பட்டது. (படம்-மகாலிங்கம்)

## மீனவர் போராட்டத்திற்கு

# தமிழ் அரசியல் தரப்பு ஆதரவு தரவேண்டும்

(யாழ்ப்பாணம்)

இந்திய இழுவை படகுகளின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து நாளை ஞாயிற்றுக்கிழமை இலங்கை கடல் எல்லையில் முன்னெடுக்கப்படவுள்ள கறுப்புக்கொடி போராட்டத்திற்கு தமிழ் அரசியல் பிரதிநிதிகளையும் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் தலைவரான சிறிகந்தவேல் புனித பிரகாஸ் தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஞாயிற்றுக்கிழமை யாழ். மாவட்டம், காங்கேசன்துறை, தீவகம், வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளிலுள்ள மீனவ சங்கங்கள் மற்றும் ஒன்றிணைந்து அந்தந்த பகுதிகளில் இப்போராட்டத்தை முன்னெடுக்க ஏற்பாடு செய்துள்ளது.

அதேவேளை யாழ். மாவட்ட கூட்டுறவு சம்மேளனமும் யாழ். மாவட்ட கிராமிய அமைப்புக்களின் சம்மேளனமும் இணைந்து இந்த போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம்.

யாழ்.மாவட்டத்திலுள்ள படகுகள் இந்த போராட்டத்தில் ஈடுபடவுள்ளதுடன் அதிலே கணிசமான படகுகள் எமது இலங்கை கடற்பகுதியில் இந்திய எல்லைப் பகுதியை முற்றுகையிட்டு போராட்டத்தை நடத்துவதற்கு உத்தேசித்துள்ளோம். ஏனைய படகுகள் அந்தந்த பிரதேசங்களிலுள்ள கடல் எல்லை பகுதிகளில் இந்த போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்கும்.

கடற்றொழிலாளர்களால் முன்னெடுக்கப்படவுள்ள இப்போராட்டத்திற்கு தமிழ் அரசியல் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் கோரி நிற்பதோடு கடற்றொழிலாளர்களின் பிரச்சினைக்கு சுமூகமான தீர்வை பெறுவதற்கு தமிழ் அரசியல் தரப்பினர் ஆதரவு தரவேண்டும் எனவும் தெரிவித்தார். (நி-5)

# இராசிபலன்

02.03.2024
மாசி 19 , சனிக்கிழமை
சப்தமி பின்னிரவு 4.25 மணிவரை

விசாகம் முற்பகல் 11.08 மணிவரை
சுபநேரம் -3.27-4.57 மணிவரை
இராகுகாலம்-9.27-10.57 மணிவரை

சந்திராஷ்டமம்
ரேவதி, அச்சுவினி.

வளவன்

**மேஷம்** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்.

**கடகம்** கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்வீர்கள், தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம்.

**துலாம்** உங்களின் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மகரம்** திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், பணத்தேவைகளை எளிதில் பூர்த்தியாகும், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், போசன சுகமுண்டு.

**சிம்மம்** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** விரும்பிய காரியம் விரும்பிய படியே கைகூடும், கற்பனை மிகுதியான நாள், வழிபாடு குதூகலம் தரும், போசன சுகமுண்டு, தகுதியானவர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம்.

**கும்பம்** தொழில் நலன் கருதி தீட்டிய திட்டங்கள் கைகூடும், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காண்பீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

**கன்னி** நேற்றைய பிரச்சினை இன்று நல்ல முடிவுக்கு வரலாம், சுயமுயற்சியின் மூலம் சுகம் காணவேண்டிய நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு** குலதெய்வ வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சயனசுகக் குறைவான நாள்.

**மீனம்** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர்.

**உன்னால் முடிந்தவரை உன் பணியை நன்றாகச் செய்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 1/2 லட்சம் பெறுமதியான மரக்குற்றிகள் கடத்தல்

## உழவு இயந்திரத்துடன் சாரதி கைது



(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுணாவில் வைரவர் கோவில் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் சட்ட விரோதமாக உழவியந்திரத்தில் எடுத்துச் செல்லப்பட்ட மரக்குற்றிகளை பொலிஸார் கைப் பற்றியுள்ளனர்.

இதன்போது மூன்றரை இலட்சம் ரூபாய் பெறுமதி யான 6இலுப்பை மரக்குற்றிகள் மற்றும் 3வேப்ப மரக்குற்றிகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

அத்துடன் உழவியந்திரத்துடன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(நி-5-30)

# போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தி யாழ்.நகரை தூய்மையாக்குவோம்

## யாழ்.பல்கலை மருத்துவ பீட பீடாதிபதி பேராசிரியர் சுரேந்திரகுமார்

(யாழ்ப்பாணம்)

**உலக சுகாதார நிறுவனத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ள அளவைக் காட்டிலும் அதிக விபத்துக்கள் யாழ்ப்பாணத்தில் இடம்பெறுவதாக யாழ். பல்கலைக்கழக மருத்தவ பீட பீடாதிபதி பேராசிரியர் சுரேந்திரகுமார் கவலை வெளியிட்டுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ்.மாநகரசபை, மாவட்டச்செயலகம், ஆளுநர் அலுவலகம் ஆகியவற்றுடன் இணைந்து யாழ்ப்பாண ஆரோக்கிய நகரம் எனும் திட்டத்தினை உலக சுகாதார நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளவுள்ளோம்.

குறித்த திட்டத்தினை மேற்கொள்வதற்காக உலக சுகாதார நிறுவனத்தின் இலங்கை பணியாளர்களும் தென்கிழக்கு ஆசியாவில் உள்ள பணியாளர்களும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் வருகை தரவுள்ளனர்.

எதிர் வரும் இரண்டு வருடங்களுக்குள் யாழ்ப்பாண நகரத்தினை நெரிசலற்ற ஆரோக்கிய நகரமாக மாற்றுவதற்கான வேலைத்திட்டங்களை அவர்கள் மேற்கொள்ளவுள்ளனர்.

எனவே எதிர்காலத்திலும் அது நகரத்தினை ஆரோக்கியமாகவும் தூய்மையாகவும் வைத்திருப்பதற்கு வாகன நெரிசல் ஒரு இடையூறாக காணப்படுகிறது.

எனவே இதற்கு காரணமாக உள்ள போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தி நகரத்தை தூய்மையாக பேணுவதற்கு அனைவரும் முன்வர வேண்டும் என்றும் இதன் போது அவர் கேட்டுக் கொண்டார்.(நி-5-33)

# சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிச்சென்ற டிப்பர்கள்

## சாரதிகளை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை



(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடி-கோப்பாய் வீதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிச் சென்ற இரு டிப்பர் வாகனங்களுடன் அதன் சாரதிகளையும் கைது செய்துள்ளதாக சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உரிய அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற போதே மேற்படி கைது நடவடிக்கையை சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான பொலிஸ் குழுவினர் முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது கைதான சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-30)

# சடலத்தை பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

கடந்த 19.10.2023 அன்று எமது மருத்துவமனைக்கு குருநகரிலிருந்து இறந்த நிலையில் தகவல் ஏதும் கிடைக்கப்பெறாத, உரிமை கோரப்படாத ஆணின் சடலம் ஒன்று ஒப்படைக்கப்பட்டு உடல் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த உடலை இது வரை எவரும் உரிமை கோரவில்லை. இவரின் உடலை அடையாளம் காட்டி 14 தினங்களுக்குள் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி-6)

# கண்புரை சத்திரசிகிச்சைக்கான கண் பரிசோதனை முகாம்

(யாழ்ப்பாணம்)

கண்புரை சத்திரசிகிச்சை செய்யவேண்டிய நோயாளர்களைப் பரிசோதனைசெய்து தெரிவு செய்யும் கண்பரி சோதனைமுகாம் இன்று சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் நடைபெறவுள்ளது.


இதில் தெரிவுசெய்யப்படும் நோயாளர்களுக்கான கண்புரை சத்திரசிகிச்சை யாழ். போதனா மருத்துவமனையில் முற்றிலும் இலவசமாக செய்யப்படும்.

எனவே கண்புரைசத்திர சிகிச்சை மேற்கொள்ளவேண்டிய தேவையுள்ள நோயாளர்கள் மேற்படி கண் பரிசோதனை முகாமில் கலந்து கொண்டுதங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் வைத்தியகலாநிதி. ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 160 | 200 | 280 | 200 |
| உருளைக்கிழங்கு | 160 | 160 | 160 | 140 | 160 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 400 | 400 | 500 |
| தக்காளி | 300 | 300 | 300 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 80 | 130 | 160 |
| கோவா | 350 | 350 | 350 | 350 | 500 |
| கரட் | 600 | 500 | 520 | 500 | 600 |
| பூசணி | 200 | 240 | 170 | 160 | 300 |
| புடோல் | 150 | 160 | 150 | 110 | 200 |
| வாழைக்காய் | 200 | 250 | 130 | 150 | 250 |
| சின்ன வெங்காயம் | 250 | 280 | 220 | 335 | 250 |
| பெரிய வெங்காயம் | 400 | 400 | 380 | 350 | 450 |
| பாகற்காய் | 350 | 400 | 350 | 300 | 400 |
| வெண்டக்காய் | 250 | 250 | 150 | 150 | 450 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 100 | 150 |
| பயற்றங்காய் | 200 | 200 | 200 | 360 | 300 |
| லீக்ஸ் | 300 | 400 | 350 | 250 | 500 |
| பீற்றூட் | 350 | 350 | 350 | 350 | 400 |
| கறிமிளகாய் | 450 | 700 | 400 | 360 | 400 |
| முருங்கைக்காய் | 1800 | 1300 | 800 | 1870 | 1200 |
| போஞ்சி | 300 | 250 | 400 | 300 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 150 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 40 | 40-50 | 60 |
| தேசிக்காய் | 150 | 200 | 120 | 260 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 110 | 65-110 | 70-100 |
| இராசவள்ளி | 320 | 400 | 300 | 350 | 300 |
| வெங்காயப்பூ | 150 | 200 | 150 | 100 | 250 |
| முள்ளங்கி | 80 | 100 | 80 | 140 | 150 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 80 | 120 | 60 |
| வல்லாரை | 60 | 50 | 50 | 80 | 60 |
| ஈரப்பலா | 80 | 150 | 70 | 110 | 200 |

# தடம்புரண்ட வாகனம் ஒருவர் மருத்துவமனையில்



(சாவகச்சேரி)


யாழில் இருந்து பொருட்களை ஏற்றிச்சென்ற சிறியரக லொறி வாகனம் ஒன்று நேற்று முன்தினம் வியாழக் கிழமை பிற்பகல் 4 மணியளவில் கொடிகாமம்-கரம்பகம் பகுதியில் ஏ9 வீதியில் தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது வாகனச்சாரதி காயங்கள் எதுவுமின்றி தப்பித்த போதிலும் அதே வாகனத்தில் பயணித்த மதகுரு ஒருவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா பிரதிநிதி-ஆளுநர் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான பணிப்பாளர் பியோ ஸ்மித், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை சந்தித்து கலந்துரையாடினார். யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநரின் உத்தியோகபூர்வ வாசஸ் தலத்தில் இந்த சந்திப்பு கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

பெண்கள், இளைஞர்கள் மற்றும் சமூகங்கள் மீது கவனம் செலுத்தி பாலியல் மற்றும் குடும்பதிட்ட ஆரோக்கியம், பெண்களுக்கான உரிமைகள் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளை தடுப்பது உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து அதிகாரிகள், துறைசார் நிபுணர்கள் மற்றும் சிவில் அமைப்புகளுடன் கலந்துரையாடும் நோக்கில் பணிப்பாளர் பியோ ஸ்மித் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

அதன் ஒரு கட்டமாக வடக்கு மாகாண ஆளுநரை சந்தித்து, மாகாணத்தில் வசிக்கும் பெண்களின் நிலை குறித்து கலந்துரையாடினார்.

வடக்கு மாகாணத்தில் 65 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண் தலைமைதாங்கும் குடும்பங்கள் காணப்படுகின்ற போதிலும் அவர்கள் வாழ்வியலை நடத்தி செல்வது பெரும் போராட்டமாக அமைந்துள்ளதாகவும் தெரிவித்தார்

வடக்கு மாகாணத்தில் வசிக்கும் பெண்களின் நிலை தொடர்பில் கேட்டறிந்து கொண்ட ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான பணிப்பாளர் பியோ ஸ்மித் இங்குள்ள பெண்களுக்கான தலைமைத்துவத்தை ஏற்று, அவர்களுக்கான முன்மாதிரியாக செயற்பட வடக்கு மாகாண ஆளுநருக்கு அழைப்பு விடுத்தார். (நி-5-33)

# யாழின் மூன்று தீவுகளுக்கு 2025 இற்குள் மின்சாரம்

## ஒப்பந்தங்கள் நேற்று கைச்சாத்து

**(யாழ்ப்பாணம்)**

**யாழ்ப்பாணத்தில் உள்ள 3 தீவுகளில் ஹைபிரிட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைப்புகளை நிறுவுவதற்கான ஒப்பந்தங்கள் நேற்று கைச்சாத்திடப்பட்டுள்ளன.**

இந்திய அரசாங்கத்தின் 10.995 அமெரிக்க டொலர் முழுமையான நிதி உதவி திட்டத்தின் கீழ் நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு ஆகியன 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி அமைப்புமுறைகளை பெற்றுக் கொள்ளும் என அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

இந்தியாவை தளமாக கொண்ட யு- சோலர் கிளீன் எனர்ஜி சொலுசன்ஸ் என்ற நிறுவனம் இந்த திட்டத்தின் கீழ் 530 கிலோவோட் காற்றாலை மின்சாரம் 1700 கிலோவோட் சூரியசக்தி உட்பட சக்தி அமைப்புகளை இந்த தீவில் உருவாக்கவுள்ளது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். இந்த திட்ட உதவிகளிற்காக இந்திய அரசாங்கம் இலங்கைக்கான இந்திய தூதுவர் முன்னாள் தூதுவர் உட்பட இந்திய அதிகாரிகளுக்கு அமைச்சர் காஞ்சன விஜயசேகர நன்றி தெரிவித்துள்ளார். (நி-5)

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

### 69,பட்டினசபை வீதி,வட்டாரம்-02

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சாங்கானை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 02. பட்டினசபை வீதியிலுள்ள இல:69 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப் பதிவேட்டின் பிரகாரம் **சுப்பிரமணியம் இராஜரட்ணம்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினை **பண்டாரப்பிள்ளை கணபதிப்பிள்ளை கைம்பெண் நாகரத்தினம்** ஆகியவர் குறித்த ஆதனத்திற்கு தனது மாமனாரான கனகசபை பண்டாரப்பிள்ளை உரித்துடையவராக இருந்தார் என்றும் அவர் இறக்க அவரது மகனும் தனது கணவருமான கணபதிப்பிள்ளையும் தானும் ஆட்சிபுரிந்து வந்திருந்தோம் என்றும் தனது கணவரின் இறப்பின் பின்னர் தானே முழு ஆதனத்தினையும் தங்குதடையின்றி ஆட்சிபுரிந்து வருகின்றேன் எனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு வே.த.மு கதிர்காமநாதன் முகதாவில் 2298/22.09.1993 ஆம் இலக்கத்தில் பிரகடன உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாது குறித்த உறுதியானது நிறைவேற்றப்பட்டுள்ளது.

**கணபதிப்பிள்ளை பத்மநாதன்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2299/22.09.1993ஆம் இலக்க உறுதியால் குறித்த **பண்டாரப்பிள்ளை கணபதிப்பிள்ளை கைம்பெண் நாகரத்தினம்** ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**இரத்தினம் பொன்னுத்துரையும் பெண் அன்னரத்தினமும்** ஆகிய வர்கள் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட 3399/05.11 2000 ஆம் இலக்க உறுதியால் குறித்த **கணபதிப்பிள்ளை பத்மநாதன்** ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தில் ஒரு பகுதியை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**நாகமுத்து மகேந்திரன் பெண் சுகுணரட்ணா** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 7437/10 12.2003 ஆம் இலக்க உறுதியால் குறித்த **இரத்தினம் பொன்னுத்துரையும் பெண் அன்னரத்தினமும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தின் ஒரு பகுதியை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **நாகமுத்து மகேந்திரன் பெண் சுகுணரட்ணா** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **நாகமுத்து மகேந்திரன் பெண் சுகுணரட்ணா** ஆகிய வருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(19324)

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசபை.**

## சேவைகளைப் பெற முற்பதிவு அவசியம்

**மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம்**

(கொழும்பு) நாளை மறுதினம் திங்கட் கிழமையின் பின்னர் சேவைகளை பெற்றுக் கொள்ள வருவோர் முன்கூட்டியே நேரத்தை ஒதுக்கிக் கொள்ள வேண்டியது கட்டாயமானதென மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த அறிவிப்பானது நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். தமது திணைக்களத்தின் இணையத்தளத்திற்குள் பிரவேசித்து நேரத்தை ஒதுக்கிக் கொள்ள முடியுமெனவும் தொலைபேசி அழைப்பின் ஊடாகவும் நேரத்தை ஒதுக்கிக் கொள்ள முடியுமெனவும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார். (நி-5)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்:பூரம்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:B.Com(DO)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/14027 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: -<br>உயரம்: 165 Cm<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு.அரச உத்தியோகம்<br>தொ.இ: G/14044 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: -<br>உயரம்: 5'7"<br>சூரி செவ் 9 இல்<br>தகைமை/தொழில்: A/L (கடை)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/14030 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: B.Pharm(HONS) Pharmacist.<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோக பட்டதாரி<br>தொ.இ:G/14052 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம் : உத்தராடம்<br>கி.பா: 40 3/4<br>உயரம்: 5'3"<br>சூரி செவ் 1 இல்<br>தகைமை/தொழில்: BA(Teacher)<br>எதிர்பார்ப்பு : பட்டதாரி, ஆசிரியர்<br>தொ.இ: B/14015 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: -<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA,(Administation)<br>மணமகள் விவாகரத்தானவர்.<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ:G/14053 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம் : சுவாதி<br>கி.பா: 31 1/2<br>உயரம்: 6<br>தகைமை/ தொழில்: HNDE(TO)<br>எதிர்பார்ப்பு: படித்த குணமுள்ள பெண்<br>தொ.இ: B/14025 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 16 3/4<br>உயரம்: 5<br>தகைமை/தொழில் MBBS (Doctor)<br>எதிர்பார்ப்பு:அரச தொழில்.வைத்தியர்<br>தொ.இ:G/14055 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 421





நாற்பதாம் அத்தியாயம்
மந்திராலோசனை

போகும்போது வந்தியத்தேவன் ஆழ்வார்க்கடியானை நெருங்கி, இது என்ன, இளவரசர் இப்படிச் செய்கிறார்? அன்று திடீரென்று குத்துச் சண்டை போட்டார் இன்று கத்திச் சண்டையில் இறங்கினார். சொல்லி விட்டாவது சண்டையை ஆரம்பிக்கக் கூடாதா? இளவரசருடைய சிநேகம் மிகவும் ஆபத்தாயிருக்கும் போலிருக்கிறதே!" என்றான்.

இளவரசர் இதைக் கேட்டுக் கொண்டே அவர்கள் பக்கத்தில், வந்து விட்டார்.

"ஆம், ஐயா! என்னுடைய சிநேகம் மிகவும் ஆபத்தானதுதான். நேற்றிரவே அது உமக்குத் தெரிந்திருக்குமே? ஆபத்துக்கு உள்ளாகாமல் இருக்க வேண்டுமானால் நான் இருக்குமிடத்திலிருந்து குறைந்தது பத்துக் காத தூரத்தில் இருக்க வேண்டும்!" என்றார்.

"இளவரசே அதற்காக நான் சொல்லவில்லை. தங்கள் பக்கத்திலிருந்து எந்தவித ஆபத்துக்கும் உட்படுவதற்கு நான் சித்தம். ஆனால் இப்படி நீங்கள் திடீர் திடீர் என்று..."

இப்போது வீர வைஷ்ணவன் குறுக்கிட்டு, "இது தெரியவில்லையா தம்பி உனக்கு? எதிரே வருகிறவர்கள் யார் என்று தெரிந்து, அதற்குத் தக்கபடி காரியம் செய்வதற்காக இளவரசர் இந்த உபாயத்தைக் கையாண்டார்! வருகிறவர்கள் யாராயிருந்தாலும் கத்திச் சண்டையைக் கண்டால் கொஞ்சம் நின்று பார்ப்பார்கள் அல்லவா? என்றான்.

இளவரசர், "திருமலை சொல்வதும் சரிதான். என்னுடைய ஜாதக விசேஷமும் ஒன்று இருக்கிறது. என்னுடன் யாராவது சிநேகமாயிருந்தால் அவர்களுக்கு மற்றவர்களின் அசூயையும் பகைமையும் நிச்சயம் சித்திக்கும். அதற்காக, நான் யாருடைய சிநேகிதத்தையாவது விரும்பினால் அவர்களுடன் அடிக்கடி சண்டை பிடிப்பது வழக்கம். இதைப் பொருட்படுத்தாதவர்கள்தான் என்னுடைய சிநேகிதர்களாயிருக்க முடியும்" என்றார்.

"அப்படியானால் சரி! இனிமேல் தாங்கள் சண்டையை ஆரம்பிப்பதற்கு காத்திராமல் நானே ஆரம்பித்து விடுகிறேன். இளவரசே! தங்களுக்கு செய்தி கொண்டு வந்த நான் ஒரு முக்கியமான செய்தியைச் சொல்ல மறந்து விட்டேன். அதை இப்போது சொல்லிவிட விரும்புகிறேன். சொல்லியே ஆக வேண்டும். தாங்கள் கேட்க விரும்பாவிட்டால் மறுடியும் கத்தியை எடுங்கள்!" என்றான் வந்தியத்தேவன்.

"வேண்டாம்! செய்தியைச் சொல்லுங்கள். கேட்கிறேன்."

"நம்மைச் சுற்றி நின்ற கூட்டத்தில் ஒரு பெண் கையில் காம்புள்ள குமுத மலருடன் நின்று கொண்டிருந்தாளே அவளுடைய கண் வீச்சுக்கு நான் தோற்றுவிட்டேன் என்று கூடத் தாங்கள் சொல்லவில்லையா? அந்தப் பெண் யார் தெரியுமா?"

"தெரியாது. அவளை நான் நன்றாய்ப் பார்க்கவில்லை. பார்க்கும் வழக்கமும் எனக்குக் கிடையாது."

"இளவரசே! அவள்தான் தங்களுக்கு ஒரு செய்தி சொல்லி அனுப்பினாள். சொல்லத் தவறிவிட்டேன். எப்படிச் சொல்வது. தங்களைச் சந்தித்ததிலிருந்து தங்களுடன் துவந்த யுத்தம் செய்வதற்கும் தலையில் வீடு இடிந்து விழாமல் தப்புவதற்கும் சரியாயிருக்கிறதே! ஆகையால் சொல்லச் சரியான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. திடீரென்று அந்தப் பெண்ணைப் பார்த்த போது அவள் கூறிய செய்தியைச் சொல்லவில்லை என்ற நினைவு வந்தது. (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## யார் அழகு?

ஓரிடத்தில் இருந்த எலி, முயல், குரங்கு, வெட்டுக்கிளி ஆகியவை ஒன்றுடன் ஒன்று நன்றாகப் பழகி வந்தன.

ஆனாலும் அவைகளுக்குள் அழகு குறித்து அடிக்கடி விவாதங்கள் எழும். ஒவ்வொன்றும் தன் பெருமையைப் பறைசாற்றும். விதத்தில் பேசும். முயல் மட்டும் மௌனமாக இருக்கும்.

"நம் நால்வரில் நான் தான் மிக அழகு! மனிதர்கள் கூட எங்கள் இனத்திலிருந்துதான் தோன்றியதாகச் சொல்வார்கள்!" என குதித்துக் குதித்து நடனமாடியபடி சொல்லியது குரங்கு.



"நாங்கள் மனிதர்களின் வீட்டுக்குள்ளே புத்திசாலித்தனமாக ஒளிந்தும் வாழ்கிறோம்! எங்களிடம் அழகும் அறிவும் இருக்கிறது. எனவே நான் தான் அழகு தேவதை" என்றது எலி.

"மனிதர்கள் திட்டும் போது குரங்கு முகம், எலி முகம் என்று கூட உங்களைப் பற்றிக் கூறுவார்கள். நான் சிறிய உருவமாக இருந்தாலும் கிளியின் நிறத்தில் அதைப் போன்றே அழகாக இருக்கிறேன்" என பெருமிதம் பொங்கக் கூறியது வெட்டுக்கிளி.

"நான் இந்த அழகுப் போட்டிக்கே வரவில்லை!" என முயல் சொல்ல, மூன்றும் சேர்ந்து சிரித்தன. முயல் மெதுவாக அவ்விட[illegible]றது.

"என்ன இருந்தாலும் வெள்ளை வெளேரென்று முயல் ஓடி வரும் அழகே தனி தான்!" என்று குரங்கு சொல்லியது.

"ஆமாம்..ஆமாம்.!" என ஒப்புக் கொண்டது வெட்டுக்கிளி. "நிறமும் அழகும் மட்டும் இருந்தால் போதுமா? அறிவு, புத்திசாலித்தனம் எல்லாம் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அழகியாக ஏற்றுக் கொள்ள முடியும்" என்றது எலி.

"எனக்கொரு யோசனை தோன்றுகிறது! நமக்குள்ளே ஓர் அழகிப் போட்டி நடத்தினால் என்ன?" என்று கேட்டது வெட்டுக்கிளி.

போட்டி நடத்தலாம். ஆனால் நடுவர் யார்? சந்தேகம் எழுப்பியது எலி.

"நடுவராக நானிருக்கிறேன்!" திடீரென்று ஒரு சப்தம் கேட்டது. அனைத்தும் மேலே பார்க்க, மரத்தின் மீது ஒரு காகம் இருந்தது.

"நீங்கள் எப்படி?" ஆச்சரியப்பட்டது குரங்கு. நீங்கள் மூவரும் பேசிக் கொண்டிருந்ததை நான் கேட்டேன்.

முயலையும் அழைத்துக் கொண்டு நாளை என் இருப்பிடம் தேடி வாருங்கள். ஆனால் நான் தேர்ந்தெடுப்பவரை அழகு ராணியாக அனைவரும் ஒருமனதாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று காகம் தன் முகவரி கூறியது.

"அப்படியே செய்கிறோம்.." அனைத்தும் சேர்ந்து குரல் கொடுத்தன.

மறுநாள் அனைத்தும் அழகு ராணி போட்டிக்காக காகத்தை தேடி போய்க் கொண்டு இருந்தன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகளை நாம் அனுமதிக்கும் போதே
அவை நம்மை தடம் மாற்றி விடுகின்றன.
~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வட பிராந்திய போக்குவரத்தும் தன்னிலை இழந்து நிற்கிறது

வடமாகாணத்தில் வீதி விபத்துக்கள் இல்லாத நாளே இல்லை எனலாம். அந்தளவுக்கு ஒவ்வொரு நாளும் வீதி விபத்துக்களும் உயிரிழப்புக்களும் நடந்த வண்ணம் உள்ளன.

இதற்கான காரணங்கள் குறித்து இவ் விடத்தில் பல தடவைகள் பிரஸ்தாபித்து விட்டோம். ஆனால் யாரும் எந்த நட வடிக்கையும் எடுப்பதாக இல்லை.

பொதுவில் வடமாகாணத்தின் போக்கு வரத்துப் பொலிஸ் சேவையில் உள்ள பொலிஸாரில் அநேகமானவர்கள் லஞ்சம் பெறு வதிலேயே கண்ணும் கருத்துமாக இருக் கின்றனர்.

சுருங்கக் கூறின் ஒவ்வொரு நாளும் லட்சக்கணக்கான ரூபாய்களை வடக்கில் உள்ள போக்குவரத்துப் பொலிஸார் லஞ்சமாக உழைக்கின்றனர். லஞ்சம் கொடுத்தால், எதையும் வெட்டி ஆளலாம் என்ற மனநிலை சாரதிகளிடம் ஏற்பட்ட பின்னர் அவர்கள் எதற்கும் தயாராகி விடுவர்.

ஆம், கையடக்கத் தொலைபேசியில் உரையாடிய வண்ணம் வாகனங்களைச் செலுத்துவது சர்வ சாதாரணமாகிவிட்டது.

இதற்கும் மேலாக, கண்மண் தெரியாத வேகத்தில் வாகனத்தை ஓட்டுவதும் வழமை யாயிற்று. இந்த இரண்டு மோசமான நிலைமை களும் வீதி விபத்துக்களைத் தாராளப்படுத்தி உள்ளன.

இதில் வட பிராந்திய போக்குவரத்து பஸ் சாரதிகளிலும் கணிசமானவர்கள் பொறுப் பற்றவர்களாக இருப்பதை இங்கு கூறித்தான் ஆக வேண்டும்.

ஒரு காலத்தில் வட பிராந்திய போக்கு வரத்துச் சேவைக்கு உயர்வான மதிப்பு இருந்தது.

பஸ் சாரதிகள் வேகமாக பஸ்ஸை ஓட்டுவதை கட்டுப்படுத்துவதற்கு இறுக்கமான மேற்பார்வை களும் இருந்தன. ஆனால் சமகால சூழலில் வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் நிர்வாகம் தளர்வுற்றுள்ளதோ என்று கருதும் அளவிற்கு நிலைமை மாறிவிட்டது.

ஆம், நேற்றைய தினம் தென்மராட்சியின் மீசாலைப் பகுதியில், சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் ஒருவர் பஸ் விபத்தில் சிக்கி உயிரிழந்த சம்பவம் எங்கும் மிகுந்த சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஒரு பொறுப்பற்ற பஸ் சாரதியால் இந்த அபத்தம் ஏற்பட்டுள்ளதாயினும் இவ்வாறான கொடுமைகள் நடப்பதற்கு, வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் நிர்வாகச் செயற்றிறன் இன்மையும் காரணம் என்பதை இங்கு கூறித்தான் ஆக வேண்டும்.

ஒரு பாடசாலை மாணவனை அடித்து விழுத்தி அந்த மாணவனின் உயிரைப் பறிக்கின்ற அளவில் பஸ் சாரதிகள் இருக் கின்றனர் எனில், எங்கள் நிலைமை எங்கே போகிறது என்பதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஒருகணம் சிந்தித்தாக வேண்டும்.

ஆக, இனிமேலாவது அதிவேகமாக பஸ்ஸை ஓட்டுவது, தொலைபேசியில் உரையாடிய வண்ணம் பஸ்ஸை செலுத்துவது ஆகிய விடயங்களை உரியவர்கள் மேற்பார்வை செய்வதுடன், இத்தகைய நிலைமைகளின் போது குறித்த பஸ்ஸில் பயணம் செய்யும் பயணிகளும் ஒட்டு மொத்தமாகச் சேர்ந்து குறித்த சாரதியை எச்சரிக்கை செய்ய வேண்டும்.

அவ்வாறு பயணிகள் எச்சரித்திருந்தால், அருமந்த உயிர்களைக் காப்பாற்றி இருக்க முடியும்.

# தேசிய சைபர் பாதுகாப்புச் சட்டத்தை கொண்டுவர அரசு தீர்மானம்

## இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டிற்குள் தேசிய சைபர் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் புதிய சட்டத்தை கொண்டு வந்த பின்னர் சைபர் பாதுகாப்பு அதிகார சபையை நிறுவ தீர்மானித்துள்ளோம்.

அத்துடன் டிஜிட்டல் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், டிஜிட்டல் பொருளாதார மாநாட்டை ஜூலை மாத இறுதியில் நாட்டில் நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, கல்வி அமைச்சின் உதவியுடன் தொழில்நுட்ப வசதிகள் அற்ற 1000 பாடசாலைகளில் 700 பாடசாலைகளுக்கு இணைய வசதிகளைப் பெற்றுக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

அதுமட்டுமல்லாது கல்வி அமைச்சுடன் இணைந்து தொழில்நுட்ப அறிவைப் பெறாமலிருக்கும் 10 ஆயிரம் பட்டதாரிகளைத் தெரிவுசெய்து அவர்களுக்கு தொழில்நுட்ப அறிவை வழங்கும் வேலைத்திட்டம் மே மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது இவ்வாறு கனக ஹேரத் தெரிவித்துள்ளார். (ம-7)

# நீதிமன்றில் முன்னிலையாகுக

## விமல் வீரவன்சவுக்கு அழைப்பாணை

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவை எதிர்வரும் 22 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று அழைப்பாணை விடுத்துள்ளது.

விமல் வீரவன்சவுக்கு எதிராக இலஞ்ச விசாரணை ஆணைக்குழு தாக்கல் செய்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்தநிலையில், பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச காய்ச்சல், வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி அவர் நேற்று மன்றில் முன்னிலையாகாத நிலையில், வழக்கை எதிர்வரும் 22ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டதுடன் பிரதிவாதியை அன்று நீதிமன்றில் முன்னிலையாகுமாறும் அழைப்பாணையும் விடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

# சுகாதார ஊழியர்களின் கொடுப்பனவு அதிகரிப்பது தொடர்பான அறிக்கை

## நிதி அமைச்சரிடம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

சுகாதார ஊழியர்களின் கொடுப்பனவுகளை அதிகரிப்பது தொடர்பில் சுகாதார அமைச்சின் தொழில்நுட்ப குழுவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன நேற்று அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

சுகாதார அமைச்சில் நேற்று காலை 72 சுகாதார தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இந்த அங்கீகாரத்தை வழங்கியுள்ளார்.

அதற்கமைவாக, கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கான யோசனை அறிக்கையானது, நிதி அமைச்சின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளதாக சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் இணை ஏற்பாட்டாளர் சானக்க தர்மவிக்ரம தெரிவித்தார்.

வைத்தியர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் 35,000 ரூபா கொடுப்பனவை தமக்கும் வழங்குமாறு கோரி 72 சுகாதார தொழிற்சங்கங்கள் அண்மையில் பணிப் புறக்கணிப்பை மேற்கொண்டிருந்தன.

இந்த பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்காக சுகாதார அமைச்சரினால் தொழில்நுட்பக் குழு நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

### மத்திய வங்கி ஆளுநரை

## கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பங்கேற்குமாறு அழைப்பு

(கொழும்பு)

மத்திய வங்கியின் ஆளுநர் உட்பட அதன் பணியாளர்களை எதிர்வரும் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் ஆளுநர் உட்பட அதன் பணியாளர்களுக்கு அதிகரிக்கப்பட்ட சம்பளம் தொடர்பான காரணிகளை விளக்குவதற்காகவே இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் ஆளுநர் உட்பட அதன் பணியாளர்களின் சம்பளம் 70 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளமைக்கு ஆளும் மற்றும் எதிர்தரப்பு [illegible] எதிர்ப்பு வெளியிட்டுள்ளதோடு மத்திய வங்கியின் ஆளுநரை பாராளுமன்றத்திற்கு அழைத்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

எனினும் புதிய மத்திய வங்கி சட்டத்துக்கு அமைவாக, தற்போது மத்திய வங்கி சுயாதீனப்படுத்தப்பட்டுள்ளதால் சம்பள விவகாரத்தில் தலையிட முடியாது என நிதியமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் மத்திய வங்கியின் ஆளுநர் உட்பட அதிகாரிகளை எதிர்வரும் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள கட்சித் தலைவர் கூட்டத்தில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

### காத்தான்குடியில் ஒன்றுகூடல்

## சஹ்ரான் சகோதரியின் கணவர் உட்பட 30 பேர் கைது

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட சஹ்ரான் ஹாசிமின் சகோதரியின் கணவர் உள்ளிட்ட 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காத்தான்குடியில் வீடொன்றில் ஒன்றுகூடியுள்ளதாக கிடைத்த இரகசிய தகவலுக்கமைய நேற்று அதிகாலை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில், சந்தேகத்தின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் சில குற்றச்சாட்டுகளில் கைது செய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டவர்களும் உள்ளடங்குவதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேகநபர்களிடம் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உணவுக்காக காத்திருந்தோர் மீது இஸ்ரேல் மூர்க்கத்தனமான தாக்குதல்

## * சுமார் 100 பேர் உயிரிழப்பு
## * 700 இற்கும் மேற்பட்டோர் படுகாயம்

(காசா)

**காசா நகரின் தென்மேற்கில் உணவு உதவிக்காக காத்திருந்த நூற்றுக்கணக்கான பாலஸ்தீன மக்கள் மீது இஸ்ரேலிய படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதல்களில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதுடன் சுமார் 700 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**



பாலஸ்தீனிய வெளியுறவு அமைச்சகம் குளிர் இரத்தம் கொண்ட "படு கொலை" என்று தெரிவித்து இந்த சம்பவத்தை கண்டித்துள்ளது.

இந்த தாக்குதல் இஸ்ரேலின் தற்போதைய "இனப் படுகொலை போரின்" ஒரு பகுதியாகும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

"பொதுமக்களை பாதுகாப்பதற்கான ஒரே வழி" போர்நிறுத்தத்தை உருவாக்க அவசரமாக தலையிட சர்வதேச சமூகத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.

துப்பாக்கிச் சூடு நடத்திய பிறகு, இஸ்ரேலிய டாங்கிகள் முன்னேறி இறந்த மற்றும் காயமடைந்த உடல்கள் மீது ஏறியது. காசாவில் பட்டினியின் விளிம்பில் உள்ள மக்களை அச்சுறுத்துவதற்கான "இது ஒரு படு கொலை" என்று அல்ஜசீரா செய்தியாளர் தெரிவித்துள்ளார்.


அல்-ஷிஃபா, கமால் அத்வான், அஹ்லி மற்றும் ஜோர்டானிய மருத்துவமனைகளுக்கு இறந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்கள் கொண்டு செல்லப்பட்டனர் சாலைகள் முற்றிலும் அழிக்கப்பட்டதால் அம்புலன்ஸ்கள் அப்பகுதியை அடைய முடியவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்த கொலைகளை தீவிரமான சம்பவம் என்று அமெரிக்கா விபரித்துள்ளது. (நி-5)

# பங்களாதேஷில் தீ விபத்து
# 43 பேர் உயிரிழப்பு

(டாக்கா)

பங்களாதேஷில் உள்ள அடுக்குமாடி கட்டடம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் குழந்தைகள் மற்றும் பெண்கள் உள்ளிட்ட 43 பேர் உயிரிழந்துள்ளனர்



தலைநகர் டாக்காவில் நேற்று முன்தினம் 10 மணியளவில் இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

கட்டடத்தில் அமைந்துள்ள உணவகத்தில் முதலில் ஏற்பட்ட தீ பின்னர் ஏனைய தளங்களுக்கும் பரவியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் 75 பேர் மீட்கப்பட்ட நிலையில், மேலும் பலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் 22 பேர் ஆபத்தான நிலையில் இருப்பதாக மருத்துவமனை தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுமார் இரண்டு மணி நேர போராட்டத்தின் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக தீயணைப்பு துறை தெரிவித்துள்ளது.

தீப்பரவலுக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி-5-6)

# இன்று ஒரு தகவல் 53



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## வால்

ஒருத்தர் நம்ம வீட்டுக்கு வருகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். வந்து சொல்லுகிறார். சார் ! நான் உங்க வீட்டிற்கு வரும் வழியில் உங்க வீட்டு நாய் என்னைப் பார்த்து வாலை ஆட்டியது என்று சொல்கிறார்.

இதற்கு என்ன அர்த்தம் என்றால் அவர் ரொம்ப நல்ல மனதோட அதை நம்மிடம் தெரிவிக்கிறார் என்று அர்த்தம். அவரே இன்னொன்று சொல்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள்.

அதாவது சார் நான் உங்க வீட்டிற்கு வரும் போது உங்க கடைக் குட்டிப் பையன் என்னை பார்த்து வாலை ஆட்டினான் சார். அப்படி என்று சொல்லுகிறார். அப்படி என்றால் என்ன அர்த்தம்.

அவர் ரொம்ப வயிற்றெரிச்சலோட அதை நம்மிடம் சொல்கிறார் என்று அர்த்தம்.

நாய் வாலை ஆட்டினால் ஒரு அர்த்தம்!

மனிதன் வாலை ஆட்டினால் ஒரு அர்த்தம்!

எத்தனையோ பிராணிகளுக்கு வால் இருக்குது. அதை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக பயன்படுத்துகிறது.

குரங்கிற்கு வால் இருக்குது. அது எதற்காக? அதற்கு வால் இருப்பது இன்னொரு கை மாதரி. குரங்கு அடிக்கடி அங்கேயும் இங்கேயும் தாவிக்கிட்டு இருக்கிறது இல்லையா? அது மாதிரியான சமயத்திலே எதையாவது கெட்டியாகப் பிடிப்பதற்கு இந்த வால் உபயோகப்படுகிறது.

"பீவர்ஸ்" என்ற ஒரு பிராணி. அதற்கு வால் தட்டையாக இருக்கும். அது வாலை எப்படி உபயோகிக்கிறது தெரியுமா? அதற்கு யாராவது எதிரி வருவதைப் பார்த்து விட்டால் போதும். உடனே தன்னுடைய தோழர்களுக்கு எச்சரிக்கை கொடுக்கும். எதிரி வருகிறான் ஜாக்கிரதையாக இருங்கள் என்று. எப்படி தெரியுமா? தட்டையாக இருக்கும் தன்னுடைய வாலை தரையில் தட்டும் அந்த சத்தத்தை கேட்டு மற்றவை எல்லாம் எச்சரிக்கை ஆகிவிடும்.

முதலைக்கு வால் இருக்கிறது! எதற்காக? தண்ணீரில் நீந்துவதற்கு அது ரொம்ப உபயோகப்படும்.

அணிலுக்கு வால் இருக்கிறது. எதற்காக? அணில் மிகவும் உயரமான இடத்தில் தாவித்தாவி ஓடும். அப்படி ஓடும் போது தவறி கீழே விழுந்து விடக்கூடாது என்பதற்காக வாலை அப்படியும் இப்படியும் ஆட்டும்.

சர்க்கஸிலே கம்பி மேலே நடப்பவர்கள் கையையும் காலையும் அப்படியும் இப்படியும் ஆட்டி வலன்ஸ் பண்ணிக் கொள்வார்கள் அல்லவா? அது மாதரி தான். கங்காரு இருக்கிறது அல்லவா? அது வேகமாகத் தாவித்தாவி ஓடும். அப்படி வேகமாக பாயும் போது நிலை தவறாமல் இருப்பதற்கு அதற்கு வால் பயன்படுகிறது. அது மட்டுமல்ல சில சமயம் அது என்ன செய்யும் தெரியுமா? தன்னுடைய பின்கால் மேல் உட்கார்ந்து இருப்பதற்கு வாலினை அது ஒரு ஸ்ரூல் மாதிரி பயன்படுத்தும்.

முயலுக்கு வால் இருக்கிறது!

முதலில் அதை பார்க்கும் போது அதற்கு எதற்கு வால் அதனால் எந்த பயனும் இல்லை என்ற மாதிரி தோன்றும்.

முயலிற்கு இருக்கும் வால் அதற்கு ஒரு நல்ல பாதுகாப்பு கேடயம். ஆமாம். எதிரிகளிடம் இருந்து தப்பித்துக் கொள்வதற்கு முயல் குடும்பம் வேகமாக ஓடும். அப்படி ஓடிக்கொண்டு இருக்கும் போது தாய் முயல் வாலை அப்படியும் இப்படியும் அசைக்கும். அந்த அசைவை பார்த்துத் தான் குட்டி முயல்கள் எப்படி ஓட வேண்டும் என்பதை புரிந்து கொள்ளும்.

மயிலுக்கு வால் இருக்கிறது.

அதை தான் நாம் தோகை என்று சொல்லுகின்றோம். ஆண் மயில் தோகை விரித்து ஆடும் அழகே அழகு!

மயில் தோகை விரித்து ஆடுகிறது என்று தான் சொல்லுவோம். மயில் வாலை ஆட்டிக் கொண்டு இருக்கிறது என்றா சொல்லுவோம். இப்படி வால் இயற்கையாக எது எதுக்கு இருக்கிறதோ அது எல்லாம் அதை அர்த்தத்தோடு பயன்படுத்தி கொண்டு இருக்கிறது.

அனுமார் கூட இலங்கேஸ்வரனுக்கு முன்னால் தன்னுடைய தன்மானத்தை காட்டுவதற்கு வாலை உபயோகப்படுத்தினார்.

இருக்கிற வாலை எல்லோரும் இப்படி பயன்டுத்தினார்கள். ஆனால் மனிதர் இல்லாத ஒன்றை இருப்பதாக கற்பனை செய்து கொண்டு இருக்கிறான்.

எல்லா இடத்திலும் வாலாட்டிக் கொண்டு இருக்கிறான்.

என்னிடம் வாலை ஆட்டாதே. வாலை ஒட்ட நறுக்கி விடுவேன் என்கின்ற எச்சரிக்கை வேற. தான் என்கின்ற அகந்தை தான் இதற்கு காரணம்.

இது எங்கே போய் முடியப்போகிறதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.இந்தியத்...

ராஜிவ் காந்தி கொலைவழக்கில் கைதாகி 33 ஆண்டுகளுக்கு மேல் சிறைவாசம் அனுபவித்த சாந்தன் 2022ஆம் ஆண்டில் விடுதலையானார்.

ஒன்றரை வருட போராட்டத்தின் பின் தமிழக அரசு இலங்கைக்கு வர சாந்தனுக்கு அனுமதியளித்தபோதும், உடல் நலக்குறைவால் சாந்தன் கடந்த மாதம் 28ஆம் திகதி உயிரிழந்திருந்தார்.

இந்நிலையில் நேற்று சாந்தனின் பூதவுடல் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பேருந்து மோதி...

குட்பட்ட மீசாலை ஐயா கடை சந்திப் பகுதியில் காலை 6 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் உயர்தர விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்ற மீசாலை கிழக்கைச் சேர்ந்த சிவநாவலன் பரணிதரன் (வயது-18) என்ற மாணவனே உயிரிழந்தவராவார்.

யாழில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த இ.போ.ச பேருந்து பாடசாலையில் விளையாட்டுப் பயிற்சியை முடித்து விட்டு துவிச்சக்கரவண்டியில் வீடு திரும்பிய மாணவனை மோதியதில் மாணவன் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட சந்தர்ப்பத்தில் உயிரிழந்துள்ளார்.

இதன்போது மாணவன் பயணித்த துவிச்சக்கரவண்டி பல துண்டுகளாக சிதறியிருந்தது. உயிரிழந்த மாணவன் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அதிபரின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

விபத்திற்கு காரணமான பேருந்து சாரதியை கைது செய்த சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

## வீதியைக் கடக்க...

அருமைநாயகம் (வயது-80) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

நேற்றுக் காலை குறித்த முதியவர் வீட்டிற்கு அருகாமையில் உள்ள பகுதியில் குப்பையை கொட்டிவிட்டு வீட்டுக்கு வருவதற்காக வீதியை கடக்க முற்பட்டபோது, பலாலியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்துள்ளார்.

இந்நிலையில் அவரை மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்தபோதும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த விபத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (ம-7,60)

## திருமலையைச்...

ளார்.

திருகோணமலை இந்துக் கல்லூரியில் எட்டாம் தரத்தில் கல்வி கற்கும் ஹரிஹரன் தன்வந் என்ற மணவனே இவ்வாறு பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை படைத்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் தனுஷ்கோடியில் இருந்து தனது பயணத்தை ஆரம்பித்த தன்வந்த் நண்பகல் 2.00 மணியளவில் தலைமன்னாரை வந்தடைந்தார்.

தனுஷ்கோடி முதல் தலை மன்னார் வரையான பகுதியை 9 மணித்தியாலம் 37நிமிடம் 54 செக்கனில் நீந்திக் கடந்து இலங்கையில் புதிய சாதனையை நிலை நாட்டியுள்ளார்.

இவரைப் பாராட்டி குளோபல் வேல்ட் ரெக்கோர்ட் (Global world Record) ஊடாக சான்றிதழ் மற்றும் பதக்கமும் இலங்கைக்கான இந்தியத் துணை தூதுவரால் வழங்கப்பட்டது. (ம-7)

## சுகா...

களை இறக்குமதி செய்த விடயம் தொடர்பில் வாக்குமூலம் வழங்கச் சென்றபோதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் சமன் ரத்நாயக்க தொடர்பில் போதுமான சாட்சியங்கள் காணப்படுமாயின் அவரைக் கைது செய்வதற்கான அதிகாரம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு காணப்படுவதாக மாளிகாகந்த நீதவான் லோச்சனி அபேவிக்ரம தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## அதிகரிக்கும்...

ளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டின் வெப்பமான வானிலை தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதன்படி, நாட்டின் சில பகுதிகளில் மனித உடலில் உணரப்படும் வெப்பநிலை அடுத்த 24மணித்தியாலங்களுக்கு எச்சரிக்கை மட்டத்திற்கு அதிகரிக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, வடமேற்கு, மேற்கு, தெற்கு, சப்ரகமுவ மாகாணங்கள் மற்றும் மன்னார் மாவட்டத்தில் மனித உடலில் உணரப்படும் வெப்பநிலை கவனம் செலுத்த வேண்டிய அளவில் இருக்கும் என்று திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.03.01
சீட்டிழுப்பு இலக்கம் 5406
K 6 9 3 9 1 4
14147

லக்கி 7 VIP
திகதி 2024.03.01
சீட்டிழுப்பு இலக்கம் 0232
D 3 0 9 4 4 4 D

தன நிதானய
திகதி - 2024.03.01
சீட்டிழுப்பு இலக்கம் - 1436
C 33 72 76 81 C
66578

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3648
சீட்டிழுப்பு திகதி 01.03.2024
B 19 28 31 33
B 25261

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.03.01
சீட்டிழுப்பு இலக்கம் 0715
கடகம் 02 35 54 62 கடகம்
22897 24

மெகா பவர்
திகதி 01/03/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1754
V 25 18 27 31 69
35108



Mega POWER LUCKY MILLIONS
பரிசுக்கு பரிசு

1752 ஆவது சீட்டிழுப்பின் வெற்றி லொத்தர்களுக்கான விசேட சீட்டிழுப்பு

வெற்றி இலக்கங்கள்

தங்கக் காசுக்கான வெற்றி இலக்கங்கள்

1136412 | 1635985 | 0433659

ரூ.5,000/- பரிசு வவுச்சருக்கான வெற்றி இலக்கங்கள்


| | | |
|---|---|---|
| 1805204 | 1657897 | 0536006 |
| 0870700 | 1364705 | 0127898 |
| 1314427 | 1428146 | 0721333 |
| 0137101 | 1467134 | 1007495 |
| 0146214 | 0365523 | 0384324 |
| 1120498 | 0666003 | 0703460 |
| 1789233 | 1286774 | 0338245 |
| 0594201 | 0824743 | 1265971 |
| 1638197 | 1293681 | 0325998 |
| 1351005 | 0759498 | 0241053 |
| 1026325 | 1697632 | 1410343 |
| 1124810 | 0498448 | 1584893 |
| 0051690 | 0630962 | 1788604 |
| 1443801 | 0826141 | 0551945 |
| 1482415 | 1540290 | 0310695 |
| 1100379 | 1285000 | 1591615 |
| 0126288 | 0545708 | 0559412 |
| 0854743 | 0523900 | 1643077 |
| 1743216 | 0719019 | 0757500 |
| 1664947 | 1793386 | 1727006 |
| 0053325 | 0327561 | 1027691 |
| 0635708 | 0684939 | 1146559 |
| 0165125 | 1799052 | 1299473 |
| 1170032 | 1328074 | 1373554 |
| 0384019 | 0172372 | 0719954 |
| 1795285 | 1281450 | 1006402 |
| 1192983 | 1076476 | 1820928 |
| 0640780 | 0185315 | 0886049 |
| 0603966 | 0091273 | 1192268 |
| 1673867 | 0475697 | 0839956 |
| 0203141 | [illegible] | [illegible] |
| [illegible] | 1711811 | [illegible] |
| | 1098485 | |


சுபிரி தன சம்பத
உத்தியோகபூர்வ முடிவுகள்
01.03.2024 வெற்றி வாரம் 114
ஆங்கில எழுத்து G
9 5 0 0 0 5
Y
30,193,212.00
DLB
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2280 வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 01.03.2024 தினம் வெள்ளி
17 18 28 44 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 75,648,829.60

சனிதா
திகதி 2024.03.01 வெற்றி வாரம் 4541 வர்ணம் செம்மஞ்சள்
26 28 30 37 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,519,347.60

சசிரி
வெற்றி வாரம் 448
சீட்டிழுப்பு திகதி 2024.03.01 பச்சை
15 19 32
08
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,065,280/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4092 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.03.01 தினம் வெள்ளிக்கிழமை
06 19 32 45 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 8,737,299.20

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
I 11 28 50 54 63
1556
01.03.2024 வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 509,205,178.20

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2206
சீட்டிழுப்பு திகதி : 2024.03.01
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 95,372,435.20
39 51 52 57 F


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

கார் (Toyota), வான் (Toyota, Hiace, நிசான்)
மோட்டார் சைக்கிள் (Honda 200)
வாகனங்கள் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :
**076 748 3028**
**077 255 7761**

(19303)

## J & J. Tailors

தையல் பயிற்சி வகுப்புக்கள்
புதிய மாணவர்கள்
(பெண்கள்)
சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.
தொழில் வாய்ப்பும் உண்டு.

**077 452 2224**

(19169)

## அரிசி, தானியங்களை அரைப்பவர்களுக்கு

இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட 10" மற்றும் 12" கிறைண்டர். 230Kg எடை கொண்டதும் உதறல்கள் அற்றதுமான, இந்தியன் மோட்டர் 5 HP மற்றும் 7.5 HP இல் இயங்கக்கூடிய புலட் மொடல் (மட்டை வைக்கத் தேவையில்லை) கிறைண்டர் உத்தரவாதத்துடன் இப்பொழுது எம்மிடம்

"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"



**ஆர்க். என். கம்பனி**

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
021 222 4021
A-9 வீதி, எழுதுமட்டுவாள்.
070 191 3571
A-9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன்.
021 228 2020

Hotline : 071 535 7799/ 071 973 9917

(19323)

## காணி விற்பனைக்கு

இராசபாதை வீதியில்
வீட்டுடன் கூடிய 2 பரப்புக்
காணி விற்பனைக்கு உண்டு.

**077 986 5457**

(19306)

## மற்றுமொரு புதிய பஸ் சேவை ஆரம்பித்துள்ளனர்

**Village Hotel Jaffna Express**

அச்சுவேலி → புன்னாலைக்கட்டுவன் →
உரும்பிராய் → திருநெல்வேலி →
யாழ்ப்பாணம் → கொழும்பு

கட்டணம் - 2700/=

தொடர்புகளுக்கு
**077 544 8503**

(19118)

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு
**076 636 3378 | 076 097 3127**

## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | | |
|---|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 268 /= | Max 5Kg | |
| 1 Kg றவை | - 286 /= | | |
| 1 Kg அரிசி மா | - 196 /= | | |
| 1 Kg Prima கோதுமை | - 188 /= | | |
| 1 Kg தீட்டல்பச்சை அரிசி | - 166 /= | | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 295 /= | | |
| 400g Sustagen சஸ்ரயன் | - 3600 /= | ~~3900/=~~ | |
| 1 Kg சன்லைட் றோஸ் பவுடர் | - 360 /= | ~~450/=~~ | |
| 01 Baby Soap | - 112 /= | ~~145/=~~ | |
| 01 Lux Soap Rose | - 145 /= | ~~175/=~~ | |
| 300g நெஸ்டமோல்ட் | - 580 /= | ~~620/=~~ | |
| 400g Anlene | - 1259 /= | ~~1350/=~~ | |
| 180ml Sunsilk சம்போ | - 440 /= | ~~480/=~~ | |

1055/=



~~1110/=~~

(19329)

**யோக்கட் மொத்த கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்**

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

## விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி வசதிகள்

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show money) வசதிகள்

தொடர்புகளுக்கு : (19320)
**074 17 37 684**

## மொத்த கொள்வனவு

400g அங்கர் பால்மா
மொத்தக் கொள்வனவுகளிற்கு
எம்மை நாடுங்கள்.

**Happy**
**Super market**
- உரும்பிராய்



**077 945 5167**

(19329)

## V2 VISA SERVICES

**கனடா**

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-8444)

## சாரதி தேவை

வான், ஆட்டோ ஓடத்தெரிந்தவராகவும்
அலுவலக வேலைகளுக்கு உதவுபவராகவும்
இருக்க வேண்டும்.

சம்பளம்: 40'000/-





வயது: 21 முதல் 40 வரை
தொடர்புக்கு:-
0777068777

(C-8444)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

புதுக்குடியிருப்பு 7ம் வட்டாரம், சிவநகரை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கடந்த 02.02.2024 அன்று இறைபதமடைந்த எங்கள் குலவிளக்கு

**அமரர்.**
# குமாரவேலு தயாளினி

அவர்களின் 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியையும் நாளை (03.03.2024) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. எனவே அன்றைய தினம் இடம்பெறவுள்ள ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

தகவல் -
**குடும்பத்தினர்**

077 868 9806

(C-8443)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.